கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.144/2016** **DW: 4** **24.03.2026**

2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 நாள் வாதி தரப்பு சாட்சியாகிய ராமசந்திரன் என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | வயது | 66 |
| த/க. பெயர் | சிங்காரம் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | டி.ஏந்தல் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

நான் வெளிநாட்டில் 7 வருடங்கள் வேலை பார்த்தேன். என்னிடம் பாஸ்போர்ட் இல்லை, செல்லாது என்று போட்டுவிட்டேன். நான் எந்த ஆண்டு வெளிநாடு சென்றேன், எந்த ஆண்டு திரும்ப வந்தேன் என்பதற்கான ரெக்காட்டுகள் இல்லை என்றால் சரிதான். பன்னீர்செல்வம் 1989ல் இறந்தார். அவரின் இறப்பு திட்டக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகி உள்ளது, இறப்பு சான்றிதழும் உள்ளது. பி.வா.த.சா.ஆ.4ல் உள்ள சாமிக்கண்ணு ராணிக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. ஆனால் நான் இருந்தேன். அந்த பத்திரம் எழுதும்போது நான் இருந்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியவாறு நான் வழக்கு சொத்தை அளக்கும் போது நான் உடன் இருந்தேன் எந்த தேதியில் அளக்கப்பட்டது என்றும், எந்த அலுவலகத்தில் இருந்து நில அளவையர் வந்து அளந்தார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏதேனும் ஒரு சொத்தை அளக்க வேண்டும் என்றால் தாலுக்கா அலுவலகத்தில் பணம் செலுத்தி F line challan வழங்கிய பின்பு அளந்து அதற்கான சான்றிதழும் நிலஅளவையர் வழங்குவார் என்றால் சரிதான். அதேபோல் நிலஅளவையர் வழக்கு சொத்தை அளந்ததற்கான சான்றிதழை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் அப்போது அளக்கும்போது மணியக்காரரும் நிலஅளவையருடன் வந்து அளந்து காட்டினார். ராணி சொத்தில் 9 செண்ட் கூடுதலாக இருந்தது என்றும், அதில் சிவசாமி பயிர் செய்தார் என்றும் அந்த சொத்தை ராணி கேட்டபோது சிவசாமி மறுத்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் ராணிக்கு பாத்தியமான 9

சென்ட் சிவசாமி அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த விவரம் ராணிக்கு தெரியுமா என்றால் தெரியும் ராணியும் அளக்கும்போது உடன் இருந்தார். இந்த 9 செண்டை சிவசாமியிடம் இருந்து ஒப்புதல் வாங்க வேண்டி ராணி தனியாக வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் இல்லை. எந்த ஆண்டு சர்வேயர் வந்து சொத்தை அளந்தார் என்றால் 2016ம் ஆண்டில் அளக்கப்பட்டது. பி.வா.த.சா.ஆ.5ல் ராணி தியாகராஜனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேனா என்றால் கையொப்பம் போட்டுள்ளேன். கிரையம் பெற்ற தியாகராஜன் இந்நாள் வரை நீதிமன்றம் வந்து ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் தியாகராஜன் வெளிநாடு சென்றுள்ளார், அவர் வெளிநாடு சென்று 5வருடங்களுக்கு பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு 2016ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்பு 30.10.2017 அன்று தான் ராணி தியாகராஜனுக்கு சொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். சிவசாமி தாக்கல் செய்த வழக்கை நானும், ராணியும் தியாகராஜனிடம் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லிதான் கிரையம் செய்தோம். சிவசாமி வழக்கை நான் பார்த்துக்கிறேன் என்று சொல்லிதான் தியாகராஜன் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்பு தான் கிரையம் கொடுக்கப்பட்டது. மேற்படி கிரையம் தேதியன்று தான் ராணி தியாகராஜனிடம் இருந்து கிரையத்தொகை பெற்றார். கிரையம் கொடுக்கும் காலத்தில் ராணியின் அனுபோகத்தில் 75 செண்ட் தான் இருந்தது என்றால் சரிதான். ஆனால் பி.வா.த.சா.ஆ.5ல் 84 செண்ட் கிரையம் கொடுக்கப்பட்டது என்று தவறாக போடப்பட்டுள்ளது என்றால் ஆவணம் படி 84 செண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது. ஆனால் தியாகராஜனிடம் 75 செண்டுக்கு தான் ஒப்புதல் செய்யப்பட்டது என்றால் இல்லை. தியாகராஜன் பெயரில் கிரையம் பின்பு பட்டா மாற்றப்பட்டதா என்றால் இல்லை. தியாகராஜன் வெளிநாட்டில் இருக்கும்போது ராணியிடம் கிரையம்பெற்ற சொத்தில் யார் பயிர் செய்து வருகிறார் என்றால் தியாகராஜனின் மனைவி விஜயா பயிர் செய்து வருகிறார். விஜயாவிடம் சிவசாமி, அவர் கணவர் மீது தாக்கல் செய்த வழக்கின் விவரம் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள காலங்களில் நான் ராணியுடன் இல்லை என்றும், 1987 நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றும் அதனால் அளந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.03.24 17:45:43 +0530

Additional District Munsif,
Tittagudi.